7. அரசினர் தீர்மானம்

பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்—

"இன்று (28-1-1981) முற்பகல் சுமார் 11-50 மணி அளவில் காவலை மீறி சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திற்குள் வலுவில் நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை, வேப்பேரி, தாணாத் தெருவில், 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. அப்துல் லத்தீப்பின் மகன் சிந்தா சாஹல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

இந்த அவையில் இதற்கு முன்னால் பல தடவை இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து நாம் சலுகைகள் காட்டி, மூன்று நாட்கள், ஒரு நாள் என்று தண்டனையைக் குறைத்திருக்கிறோம், தொடர்ந்து மீண்டும் மீண்டும் இந்த அவையில் இப்படிப்பட்ட குற்ற நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஏழு நாட்கள் என்று போடப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது என்ற அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இதுவரை கொடுத்த சலுகையைக் கொடுக்காமல் ஏழு நாட்கள் என்று தீர்மானிக்க வேண்டுமென்று தீர்மானம் மொழியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முடிவு செய்யலாம். (குறுக்கீடு)

துணைத் தலைவர் அவர்களே, நல்லவர்களுக்கு அன்பு காட்டுவது, அருள் காட்டுவது, பற்றுக் காட்டுவது பந்தம் காட்டுவது நல்லது. தீயவர்களுக்கு இப்படிப்பட்ட அன்புள்ளத்தையும், பற்றுள்ளத்தையும் காட்டுதல் கூடாது. என்றாலும் நீங்கள் அத்தனை பேரும் காட்டுவதன் காரணமாக இந்தத் தண்டனையை ஏழு நாட்கள் என்பதற்குப் பதிலாக மூன்று நாட்கள் என்ற திருத்தத்தோடு தீர்மானத்தை நிறைவேற்றலாம்.

மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

'' இன்று (28-1-1981) முற்பகல் 11-50 மணி அளவில் காவலை மீறி சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திற்கு வலுவில் நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை. வேப்பேரி, தாணாத் தெருவில் 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. அப்துல் லத்தீப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிகிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

ஊ. பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: 28-1-1981 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி நிரலின் விவரம் பின்வருமாறு:—

29-1-1981 (வியாழக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்-தொடர்ச்சி
30-1-1981 (வெள்ளிக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சியும், பதிலுரையும்.
31-1-1981 (சனிக்கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
1-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.